# ARIGNAR ANNA GOVERNMENT ARTS COLLEGE, VILLUPURAM - 605602. TAMILNADU

On behalf of YRC and RRC, Female Children Awareness Rally was conducted on 20.01.2020 from Villupuram Collectorate to Signal. It was presided by the District Collector of Villupuram. More than 2000 students were participated in the rally.



விழுப்புரம்/கள்ளக்குறிச்சி ★ சனிக்கிழமை, 25 ஜனவரி 20

## பெண் குழந்தைகள் தின விழிப்புணர்வுப் பேரணி

விழுப்புரம், ஜன. 24: தேசிய பெண் குழந்தைகள் தினத்தையொட்டி, சமூக பாதுகாப்புத் துறை சார்பில் விழிப்புணர்வுப் பேரணி, விழுப்புரத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து புறப்பட்ட இந்தப் பேரணியை மாவட்ட ஆட்சியர் ஆ.அண்ணாதுரை கொடியசைத்து தொடக்கி வைத்து, அதில் பங்கேற்று நடந்து வந்தார். பேரணியில், விழுப்புரம் அரசு கலைக் கல்லூரியைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

பெண் குழந்தைகளின் கல்வி, பாதுகாப்பு, அவர்களது உரிமைகள், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் உள்ளிட்ட வாசகங்களுடன் கூடிய பதாகைகளை கையில் ஏந்தியபடி, விழிப்புணர்வு முழக்கமிட்டவாறு பேரணியில் மாணவிகள் சென்றனர். பேரணி திருச்சி சாலை வழியாக விழுப்புரம் நான்கு முனை சந்திப்பு வரை சென்றது.

இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வாயிலில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் என்று கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதனை மாவட்ட ஆட்சியர் கையெழுத்திட்டு தொடக்கி வைத்தார். இதையடுத்து, ஆட்சியர் அலுவலக ஊழியர்கள் சார்பில் பெண் குழந்தைகளை காப்போம் என உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில் கூடுதல் ஆட்சியர் ஸ்ரேயா.பி.சிங், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் கஜலட்சுமி உள்ளிட்ட முக்கியத் துறை அலுவலர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

விழுப்புரத்தில் தேசிய பெண் குழந்தைகள் தின விழிப்புணர்வுப் பேரணியை தொடக்கி வைத்து பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் ஆ.அண்ணாதுரை. உடன் மாவட்ட கூடுதல் ஆட்சியர் ஸ்ரேயா. பி.சிங். உள்ளிட்ட அலுவலர்கள்.